ஏற்படுத்தப்பட்டு, அந்தத் திருக்கோயிலின் சூழ்நிலை இப்போது மேம்படுத்தப்பட்டிருக்கின்றது. உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கின்றது. தொடர்ந்து அங்கு தேவையான அனைத்து அடிப்ப இன்னும் அடிப்படை வசதிகளும் படிப்படியாகச் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அவர்கள்.

8—

தரம் உயர்த்துதல்

***130036—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, வழுவூர் ஊராட்சி, வேழமுறித்தான் பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே மேல்நிலைப் பள்ளியாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, வழுவூர் ஊராட்சி, வேழமுறித்தான் பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு பணிகளை எனது தொகுதியில், பள்ளிக் கல்வித் துறையில் நிறைவேற்றித் தந்துள்ளார்கள். அந்தப்

பள்ளியைப் பொறுத்தவரையில் அரசு சொல்லியிருக்கின்ற விதிகளுக்குட்பட்டு நிலங்கள் இருக்கின்றன. அவை கொடையாளிகளால் வழங்கப்பட்டு, இன்னும் பள்ளிக் கல்வித் துறைக்கு மாறுதல் செய்யப்படாமல் உள்ளன. அவற்றை நான் முயற்சி எடுத்து நிச்சயமாக மாறுதல் செய்து தருகிறேன். அதைப்போல சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் ரூபாய் பத்து இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலும் கழிப்பறைக்கான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் துவங்க இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, வேழமுறித்தான் பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுதியளித்தவாறு, தேவையான நிலத்தை அரசினுடைய பெயருக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பெயருக்கு அவர்கள் நில மாற்றம் செய்து தரக்கூடியபட்சத்தில், அந்த நிபந்தனையோடு ஒட்டியிருக்கக்கூடிய இதர நிபந்தனைகளையும் அந்தப் பள்ளி பூர்த்தி செய்து தரக்கூடியபட்சத்தில், வரக்கூடிய கல்வியாண்டில் நிச்சயமாக அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தங்கள் வாயிலாக தெரிவித்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல் நாகை மாவட்டம், மயிலாடுதுறை கல்வி மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியத்தில் வடகரை ஊராட்சி ஒன்றியத்தில் நடுநிலைப் பள்ளி ஒன்று அமைந்துள்ளது. இது 1893 ஆம் ஆண்டு தொடக்கப்பள்ளியாக இருந்தது, சென்ற நூற்றாண்டிலே துவக்கப்பள்ளியாக இருந்தது 1957-இல் இது நடுநிலைப் பள்ளியாகத்

2011 ஜனவரி 10]

தரம் உயர்த்தப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த பள்ளியாகும். 2006 ஆம் ஆண்டு இதற்கு ஒரு இலட்சம் ரூபாய் பொதுமக்களால் நிதி செலுத்தப்பட்டு அரசுக்கு முன்மொழிவும் அனுப்பப்பட்டுள்ளது. இஸ்லாமியர்கள் அதிகமாக வாழக்கூடிய இந்தப் பகுதியில், உயர்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தினால் பெண்கள், கல்வியை இடையில் நிறுத்தும் நிலை ஏற்படுகிறது. எனவே, பள்ளிக் கல்வித் துறையின்மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்து கொடுத்திருக்கிற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு வடகரை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு மத்திய அரசிற்கு ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசிடமும் பேசியிருக்கிறோம். அதுகுறித்த minutes இன்னும் sign-ஆகி நம்மிடம் வரவில்லை. வந்தவுடன் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அறிவிப்பிற்குப் பிறகு தரம் உயர்த்தக்கூடிய பள்ளிகளுடைய பட்டியலைத் தயாரிக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தால், அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளித்து, அந்த வடகரை பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தில் என்ன கேட்கப் போகிறீர்கள்?